# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 31.05.2013 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் சூரா அள்ளுஹாவின் 12வது வசனத்தை ஓதினார்கள்:**

وَأَمَّا بِنِعْمَةِ رَبِّكَ فَحَدِّثْ

*பொருள்: மேலும் நீர் உமது இறைவனின் பேரருளை பறைசாற்றுவீராக. (93:12)*

உலக அளவிலும், மார்க்க அளவிலும் அல்லாஹ்வின் அருட்கொடைகள் இருக்கின்றன. உலக அருட்கொடைகள் எவ்வித பாகுபாடுமின்றி ஒவ்வொருவருக்கும் கிடைக்கின்றது. எவர்கள் இறைவனுடன் தொடர்பு வைத்திருப்பவர்களாகவும், அவன் மீது ஈமான் கொண்டிருப்பவர்களாகவும், அவனை அனைத்து அருட்கொடைகளின் ஊற்றாகவும் கருதுகின்றவர்களாகவும் இருக்கின்றார்களோ அவர்கள் இறைவனின் பௌதீக அருட்கொடைகளுக்கும் நன்றி செலுத்துகின்றனர். அதனை தங்களிடத்திலும் அவர்கள் வெளிப்படுத்திக் காட்டுகின்றனர். அத்துடன் உலகிற்கும் அதைப் பற்றி எடுத்துக் கூறியவாறு இந்த அருள்கள் முழுக்க முழுக்க இறைவனின் அருளால்தான் கிடைத்தது என்று கூறுகின்றனர். ஆனால் இந்த உலக அருட்கொடைகளைத் தவிர மார்க்க, ஆன்மீக அருட்கொடைகளும் உள்ளன. ஒரு முஸ்லிம், ஒரு உண்மையான முஸ்லிம் மேலும் இந்தக் காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உண்மைப் பேரன்பரின் அடிமையாக இருக்கின்ற ஓர் அஹ்மதி அல்லாஹ்வின் இந்த அருட்கொடைகளைப் பெறுபவராக இருக்கின்றார். எனவே அல்லாஹ்வின் இந்த அருளையும், அருட்கொடையையும் எடுத்துக் கூறுவதும், இதை வெளிப்படுத்திக் கூறுவதும் ஓர் அஹ்மதியின் மீது கடமையாகும்.

இதற்கான ஒரு வழிமுறை அல்லாஹ்வின் கட்டளைகளுக்கேற்ப செயலாற்றியவாறு தனது வாழ்க்கையைக் கழிப்பதாகும். இரண்டாவது வழிமுறை இதைப் பற்றி உலகிற்கு முரசு கொட்டி அறிவிப்பு செய்வதாகும். எங்களுக்கு கிடைத்துள்ள இந்த அருட்கொடையிலிருந்து இந்த ஒளியிலிருந்து பங்கு பெற்றவாறு அல்லாஹ்வின் அருள்களுக்கு வாரிசாகுங்கள் என்று உலகிற்கு தெரிவிப்பதாகும். இதுவே இறைவனின் ஒளியாகும். இதில் தான் உங்களது நிலைத்திருக்கும் தன்மையும் உலகம் எஞ்சியிருப்பதும் அடங்கியிருக்கின்றது. இதில் தான் உங்களுக்கு உங்களது இம்மை மற்றும் மறுமையை சரிசெய்து கொள்வதற்கான வழிவகைகள் உள்ளன என்று உலகிற்கு தெரிவிக்க வேண்டும். பிறகு அல்லாஹ்வின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதுடன் அல்லாஹ்வின் அருள்களின் வாசல்கள் திறப்பது மற்றும் நமது சிறிய முயற்சிகளுக்கு எதிரில் அல்லாஹ் மிகவும் அதிகமாக நமக்கு வழங்குவது, நாம் அல்லாஹ்வின் மார்க்கத்தின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்குக் காரணமாக இருப்பது மேலும் இதன் மூலம் பல மடங்கு அதிகமாக நமது எதிர்பார்ப்புகளை விட மிகவும் அதிகமாக அல்லாஹ்வின் அருள் கிடைப்பது ஆகிய இவையெல்லாம் அல்லாஹ் நம்மீது தனது அன்பையும் நேசத்தையும் வெளிப்படுத்துவதாகும். இது நம்மை மீண்டும் இறைவனது அருட்கொடைகளைப் பற்றி எடுத்துக் கூறுவது மற்றும் அவனுக்கு நன்றி செலுத்துவதை வெளிப்படுத்திக் காட்டுவது ஆகியவற்றின் பக்கம் நமக்கு கவனமூட்டுகின்றது.

எனவே ஒரு உண்மையான மூஃமின் அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு வாரிசாகிக் கொண்டே செல்வதற்கு இந்தக் கருத்தை உண்மையான முறையில் அறிந்து கொள்வது அவசியமானதாகும். இந்தக் காலத்தில் அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூதுச் செய்தியை உலகில் பரப்புவதற்காக அனுப்பி இருக்கும் போது அவர்களுக்கு தனது சிறப்பான உதவிகளையும் வழங்கியிருந்தான். தனது அடையாளங்களையும் அவர்களுக்கு வழங்கியிருந்தான். அது ஒளிமயமான பகல் போன்று வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது; வெளிப்பட்டது. இதன் காட்சிகளை நாம் பார்த்துக் கொண்டேயிருக்கின்றோம்.

அல்லாஹ் அவர்களுக்கு வழங்கிய உதவிகள் அல்லாஹ்வின் வாக்குறுதிக்கேற்பவே இருந்தது. நீர் எனது அருட்கொடைகளை எண்ண முடியாது என்று அல்லாஹ் முதலிலேயே அவர்களிடம் கூறியிருந்தான். அல்லாஹ் அவர்களுக்கு இல்ஹாம் மூலமாக,

وَإِنْ تَعُدُّوا نِعْمَةَ اللَّهِ لَا تُحْصُوهَا

*நீர் இறைவனின் அருட்கொடைகளை என்ன விரும்பினால் அது உம்மால் சாத்தியமற்றதாகும் (16:19)* என்று கூறினான்.

பிறகு وَأَمَّا بِنِعْمَةِ رَبِّكَ فَحَدِّثْ *உமது இறைவனின் அருள்களை எடுத்துக் கூறிக் கொண்டிருப்பீராக* என்றும் இல்ஹாம் மூலம் தெரிவித்தான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

وَأَمَّا بِنِعْمَةِ رَبِّكَ فَحَدِّثْ என்ற கட்டளைக்கேற்ப கருணைமிக்க இறைவன் இந்த எளியவனுக்கு எல்லா அருள்களில் இருந்தும் தனது பங்கை வழங்கியுள்ளான். இந்த எதற்கும் தகுதியற்றவனை வெறுங்கையோடு அவன் அனுப்பி வைக்கவில்லை என்று கூறுவதில் எனக்கு எவ்வித தயக்கமும் இல்லை. எந்த அடையாளங்களும் இல்லாமல் அவன் என்னை அனுப்பவில்லை. இப்போது வெளிப்படுகின்ற அந்த எல்லா அடையாளங்களையும் அவன் எனக்கு வழங்கியுள்ளான். அவை மேலும் வெளிப்படும். இறைவன் எதுவரை தெளிவான முறையில் தனது அத்தாட்சிகளை நிலைநாட்ட –வில்லையோ அதுவரை இந்த அடையாளங்களை வெளிப்படுத்திக் காட்டிக் கொண்டே இருப்பான்.

**பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

தாழ்மைக்குணம், பணிவு ஆகியவை முழுமையான நிபந்தனையாக இருக்கின்றது. இறைவனின் உண்மையான அடியாராக ஆக வேண்டும் என்றால் பிறகு தாழ்மைக் குணத்தையும், பணிவையும் மேற்கொள்ள வேண்டியது கண்டிப்பான நிபந்தனையாகும். وَأَمَّا بِنِعْمَةِ رَبِّكَ فَحَدِّثْ என்ற இறை கட்டளைக்கேற்ப இறை அருட்களைப் பற்றி எடுத்துக் கூறுவதும் மிகவும் அவசியமானதாகும்.

எனவே அல்லாஹ் எப்போது நம்மீது அருள் புரிந்தாலும் அதை நாம் எடுத்துக் கூறுவதும் வெளிப்படுத்திக் காட்டுவதும் இந்த இறை கட்டளைக்கு ஏற்பவேயாகும். அவ்வாறு நாம் செய்யவும் வேண்டும். ஆனால் அதை தன்னடக்கத்துடனும் பணிவுடனும் செய்ய வேண்டும். அதற்கு மாற்றமாக நமது பெருமையை எடுத்துக் கூறும் வகையில் அவற்றை செய்யக்கூடாது.

கடந்த சில நாட்களாக நான் அமெரிக்கா மற்றும் கனடாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தேன். அங்கு பல நிகழ்ச்சிகள் முஸ்லிம்கள் அல்லாத மற்றவர்களுடனும் நடைபெற்றது. அல்லாஹ் இஸ்லாத்தின் சரியான தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்கான நல்வாய்ப்பையும் வழங்கினான். எந்த அளவு விரிவான அளவில் அல்லாஹ்வின் அருளால் இந்த தூதுச் செய்தி எட்டியது என்றால், இதனை உள்ளூர் ஜமாஅத்தில் இந்நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தவர்கள் கூட கற்பனை செய்து பார்க்கவில்லை. இது அல்லாஹ்வின் அருள்களில் ஓர் அருளாகும். இது எவ்வித முயற்சியினாலும் நடந்த ஒன்றல்ல. இதை வெளிப்படுத்திக் கூறுவது மீண்டும் நம்மை இறைவனுக்கு நன்றி செலுத்தக் கூடிய அடியார்களாக ஆக்குகின்றது.

இவ்வகையில் நான் எனது சுற்றுப் பயணத்தில் பல்வேறு நிலைமைகளைப் பற்றி இன்று எடுத்துக் கூறுவேன். எனது சுற்றுப் பயணத்தின் மூலமாக அமெரிக்கா மற்றும் கனடாவின் West Coast ல் உள்ள ஜமாஅத்துகளுடன் எனக்கு அறிமுகம் ஏற்பட்டது. ஏனென்றால் இதற்கு முன்பு நான் இங்கு சென்றதில்லை. அமெரிக்காவில் லாஸ் ஏஞ்சலஸ் –ற்கு நான் சென்றிருக்கின்றேன். இந்தப் பகுதியைப் பற்றியும் இந்த நகரம் எப்படிப்பட்டது என்பது பற்றியும் சுருக்கமாக நான் எனது குத்பாவில் ஏற்கனவே எடுத்துக் கூறி விட்டேன். அது Espanian மக்கள் வாழும் பகுதியாகும். அங்குள்ள ஜமாஅத் என்ன பணிகளைச் செய்ய வேண்டும் என்பதைப் பற்றி நான் கூறி விட்டேன்.

முஸ்லிம்கள் அல்லாத மற்றவர்களுடன் ஏற்பட்ட தொடர்பின் காரணமாக இஸ்லாத்தின் உண்மையான வடிவம் அவர்கள் வரை எட்டியதைப் பற்றி சுருக்கமாக நான் எடுத்துக் கூறுவேன்.

அங்குள்ள ஒரு ஹோட்டலில் ஜமாஅத் வரவேற்பு நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டைச் செய்திருந்தது. அதில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த மக்கள் அதிகமான எண்ணிக்கையில் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டைச் செய்தவர்கள் இம்மக்கள் உலகவாதிகளாக இருப்பதால் ஒருவேளை இவர்கள் அதிகமாக வரமாட்டார்கள் என்று நினைத்தார்கள். ஆனால் கடைசி நாள் வரை வருபவர்கள் பற்றிய தகவல் வந்து கொண்டிருந்தது. பொதுவாக எவ்வளவு பேருக்கு நாம் அழைப்பிதழ்களைக் கொடுப்போமோ அந்த அளவுதான் மக்கள் வருவார்கள் என்பது தான் நமது கணிப்பாக இருக்கும். ஆனால் இதற்கு எந்த அளவு Response இருந்தது என்றால் நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டைச் செய்தவர்கள் கவலைப்பட்டுக் கொண்டிருந்தனர். பிறகு அந்த ஹாலில் அமர்வதற்காக அவர்கள் என்ன ஏற்பாட்டைச் செய்திருந்தார்களோ அதனை மேலும் அதிகமாக்க வேண்டியது வந்தது. பிறகு இறுதியில் சிலர் தமது நண்பர்களையும் அழைத்து வருவதாகக் கூறிய போது அவர்களிடம் மன்னிப்புக் கேட்டவாறு வேண்டாம் என்று கூற வேண்டியது வந்தது. இவர்கள் சாதாரண மக்களைப் போன்றவர்கள் அல்ல. மாறாக நன்கு படித்தவர்களாவர். மேலும் இம்மக்கள் சமுதாயத்தில் அனைவரும் நன்கு அறிந்த மக்களாக இருந்தனர். இந்த நிகழ்ச்சியில் நான் அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன் என்பதற்கு சுருக்கமான விளக்கத்தைக் கூறினேன். மேலும் இந்த விளக்கத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மனித குலத்தின் மீது வைத்திருந்த அன்பையும் பரிவையும் பற்றி எடுத்துக் கூறி அவர்களது அழகிய முன்மாதிரியின் சில அம்சங்களையும் எடுத்துக் கூறினேன். இதுதான் இஸ்லாத்தின் போதனையாகும். இந்த முன்மாதிரி நமக்கும் முன்மாதிரியாக இருக்கின்றது என்றும் கூறினேன். பொதுவாக முஸ்லிம்கள் தொடர்பாக அவர்கள் கடுமையை விரும்பக் கூடியவர்கள், தீவிரவாதத்தை விரும்பக் கூடியவர்கள் என்ற இந்தக் கருத்து முஸ்லிம்கள் தொடர்பாக எப்படி இருக்க முடியும்? என்பதையும் பற்றி கூறினேன்.

இந்த போதனைகள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முன்மாதிரி ஆகியவற்றைப் பற்றி கூறியதன் மூலம் சுற்றுச்சூழலில் ஒரு சிறந்த தாக்கம் ஏற்பட்டது. ஒவ்வொருவரும் இதுதான் இஸ்லாத்தின் போதனை என்றால், நிச்சயமாக இதனை பிரச்சாரம் செய்ய வேண்டும். நிச்சயமாக இது பரவ வேண்டும். இன்றைய உலகிற்கு இது தேவைப்படுகிறது என்று கூறினார்கள். இவை பிறருக்கு காட்டுவதற்காக அவர்கள் கூறியவை அல்ல. என்னிடம் வந்து பலரும் மீண்டும் மீண்டும் இதுபற்றி தமது கருத்தைத் தெரிவித்தனர். பிறகு சிலர் M.T.A. –வில் தமது கருத்துக்களை எடுத்துக் கூறி அதனை பதிவு செய்தனர். அவற்றில் சிலவற்றை நான் உங்கள் முன்னால் வைக்கின்றேன்.

இந்த நிகழ்ச்சி மே மாதம் 11ம் தேதி நடைபெற்றது. இதில் வாழ்க்கையின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த மக்கள் கலந்து கொண்டனர். இவர்களது எண்ணிக்கை 251 ஆகும். இவர்களுக்கு இஸ்லாம் அமைதியை நிலைநாட்டுவது, ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துவது, ஒருவர் மற்றவரை மதிப்பது, உலகில் நீதியை நிலைநாட்டுவது தொடர்பாக வழங்கியுள்ள போதனைகளை எடுத்துக் கூறிய போது நான் ஏற்கனவே கூறியது போன்று இந்நிகழ்ச்சி அவர்களுக்கு மிகவும் பிடித்திருந்தது. அவர்கள் அதனை பாராட்டினார்கள்.

இந்நிகழ்ச்சியில் U.S. காங்கிரஸின் 5 உறுப்பினர்கள் இருந்தனர். சிறந்த மீடியாக்களுடன் தொடர்புள்ள 14 நபர்கள் இருந்தனர். அரசாங்கத்தின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் 17 பேர் இருந்தனர். படித்தவர்கள் இருந்தனர். இராணுவ அதிகாரிகள் இருந்தனர். பல்கலைக்கழகத்தின் 37 பேராசிரியர்கள் இருந்தனர். பெரும் எண்ணிக்கையில் N.G.O. –க்களும் இருந்தனர். Diplomates 13 பேர் இருந்தனர். பல்வேறு தொழில்புரியும் நபர்கள் ஏறக்குறைய 36 அல்லது 37 பேர் இருந்தனர். பல்வேறு மதத் தலைவர்கள் 29 பேர் இருந்தனர். இவ்வாறு பல படித்த மக்கள் இருந்தனர். Think Tank மக்களும் இருந்தனர். Police Force மற்றும் Army Force –ஐச் சேர்ந்தவர்களும் இருந்தனர். மிகச் சிறந்த துறைகளைச் சார்ந்திருந்த நல்ல எண்ணிக்கையைக் கொண்ட இம்மக்களுக்கு இந்த தூதுச் செய்தி எட்டியது.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட Bargo Bulger என்ற பெயருடைய ஒருவர் தமது கருத்தை இவ்வாறு கூறினார்:

நீங்கள் என்னையும் எனது குடும்பத்தையும் வரவேற்பு நிகழ்ச்சியில் அழைத்திருந்தீர்கள். நான் ஆழமான அன்பின் உணர்வுகளுடன் உங்களுக்கு நன்றி தெரிவிக்கின்றேன். இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டது எனது வாழ்க்கையில் ஒரு அசைவும் எழுச்சியும் ஏற்படுவதற்கு காரணமாக ஆகிவிட்டது. இவ்வாறு நமது சந்திப்பு நமக்கு மத்தியிலேயே இருந்து வந்த ஒரு இயக்கத்துடன் ஏற்பட்டது. ஆனால் இதுவரை நாம் அவர்களைப் பற்றி தெரியாமல் இருந்தோம்.

**எனது சொற்பொழிவு பற்றி எடுத்துக் கூறியவாறு ஒருவர் இவ்வாறு எழுதியுள்ளார்:**

இவர் தனது சொற்பொழிவில் கூறியுள்ள முக்கியமான கருத்தாவது எல்லாரிடமும் அன்பு. எவரிடத்தும் பகையில்லை என்பதும், மற்றவர்களுக்காக திறந்த உள்ளத்துடன் நல்லவற்றை ஏற்றுக் கொள்கின்ற உணர்வும் நம் அனைவருக்கும் ஒரே இறைவன் இருக்கின்றான் என்று அவரது நாவிலிருந்து வந்த ஒவ்வொரு சொல்லும் உண்மையானது உலக அமைதி தொடர்பான அவரது தூதுச் செய்தியும் உலகை அணு ஆயுதப் போர் தொடர்பாக அவர் எச்சரிப்பதும் ஆகிய இந்த எல்லா விசயங்களும் உலகத் தலைவர்கள் கேட்க வேண்டிய முக்கிய விசயங்களாகும்.

இஸ்லாமிய மார்க்கத்தின் இந்த போதனைகள் உண்மையானதும் எவ்வளவு ஒளிமயமானதும் என்றால் மற்றவர்களுக்கும் அதன் ஒளி மின்னுவது தெரிகின்றது.

**பிறகு இந்த தூதுச் செய்தி பற்றி ஒரு நகரத்தின் மேயர் கூறினார்:**

உலகில் அமைதியான தொடர்புகள் ஏற்படவும் சகிப்புத் தன்மையுடன் நடந்து கொள்வது தொடர்பாகவும் இந்த தூதுச் செய்தி இருந்தது. அரசும் ஆலயமும் தனித்தனியாக செயல்பட வேண்டும் என்ற கருத்தை நான் வரவேற்கின்றேன். உலகில் எங்கெல்லாம் மத கொள்கைகளின் அடிப்படையில் மக்கள் எதிர்க்கப்படுகின்றனரோ அங்கு அவர்களை பாதுகாக்க வேண்டும். அதன் மூலம் உலக அமைதிக்கான அடித்தளத்தை அமைக்க வேண்டும்.

**கிறிஸ்தவரான இவர் கூறுகின்றார்:**

இந்த உலக அமைதி மற்றும் சகிப்புத் தன்மையின் தூதுச் செய்தியானது உண்மையில் உண்மையான இஸ்லாமிய போதனைகள் மூலமே நடைமுறைக்கு சாத்தியமானது. நாம் நமது இளைய தலைமுறைக்கு இந்த போதனைகள் மூலமாக சிறந்த எதிர்காலத்தை அவர்கள் உருவாக்கிக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்க முடியும்.

இஸ்லாத்திற்கு எதிராக பேசப்பட்ட அமெரிக்கா எங்கே? இப்போது இஸ்லாமிய போதனைகளைப் பாராட்டும் அமெரிக்கா எங்கே?

லாஸ் ஏஞ்சலஸ் –ன் Sheref அவர்கள் அந்த பகுதியில் புகழ்பெற்ற நபர் ஆவார். அவர் என்னைப் பற்றி கூறுகின்றார்:

லாஸ் ஏஞ்சலஸ் –ல் சுற்றுப்பயணம் மேற்கொண்ட போது அங்கிருந்த 500 நபர்களுக்கு அன்பு, அமைதி மற்றும் நீதியை நிலைநாட்டுவது பற்றிய தூதுச் செய்தியை அவர் வழங்கியுள்ளார். அந்த நபர்களில் காங்கிரஸ் உறுப்பினர்கள், City Council அதிகாரிகள், பொதுமக்கள் பாதுகாப்புத் துறையைச் சேர்ந்தவர்கள், உயர் அதிகாரிகள், பேராசிரியர்கள் ஆகியோர் அடங்குவர். மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான போதனைகளுக்கேற்ப எல்லாரிடமும் அன்பு. எவரிடத்தும் பகையில்லை என்பதை வலியுறுத்திக் கூறினார்.

**பிறகு எழுதுகின்றார்: உலக அமைதியை நிலைநாட்டுவது நம் அனைவர் மீதும் உள்ள பொறுப்பாகும்.**

இந்த நாட்டில் தான் இஸ்லாம் தொடர்பாகவும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பாகவும் தவறான முறையில் பல விசயங்களும் கூறப்பட்டன. பிறகு இதே நாட்டில்தான் இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உண்மையான நிலை எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றது.

இந்த போதனைகள் ஒவ்வொருவருக்கும் தேவையானது என்று கூறுவதைத் தவிர வேறு எதனையும் அவர்களால் கூற முடியவில்லை. அல்லாஹ் இந்த எல்லா முஸ்லிம்களுக்கும் அறிவை வழங்குவானாக! இஸ்லாத்தின் அழகிய போதனைகளின் அழகை தங்களது செயல்களால் இவர்கள் உலகில் நிலைநாட்ட வேண்டும்.

**கலிஃபோர்னியாவின் முன்னாள் ஆளுநர் கூறுகின்றார்:**

இந்த தூதுச் செய்தி அமைதி, அன்பு, பரஸ்பரம் ஒருவர் மற்றவரை மதித்து நடப்பது ஆகியவற்றின் தூதுச் செய்தியாகும். இது சாதாரண தூதுச் செய்தி அல்ல. நாம் இறைவனிடமும் அவனது படைப்பினங்களுடனும் அன்பு கொள்வதற்காக படைக்கப்பட்டுள்ளோம். ஒரே இறைவனிடம் பிரார்த்தனை செய்பவர்களாக நாம் இருக்கின்றோம். அவன் நம் எல்லாரையும் பார்க்கின்றான்.

**பிறகு லாஸ் ஏஞ்சலஸ் கவுன்சில் உறுப்பினர் என்னைப் பற்றி கூறுகின்றார்:**

இவர்கள் அன்பையும், பிறரை மதித்து நடப்பதையும் பற்றி எடுத்துக் கூறினார்கள். மக்களை எவ்வாறு ஒன்றுசேர்க்க முடியும்? என்பதையும், எவ்வாறு பரஸ்பரம் ஒருவருக்கும் மற்றவருக்கும் இடையில் ஒற்றுமையை ஏற்படுத்த முடியும்? என்பதையும் புரிய வைத்தார்கள். இவரது அமைதி மற்றும் நல்லிணக்கத்தின் தூதுச் செய்தி எல்லாரிடமும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கின்றது. ஒவ்வொருவரும் இதனை கவனமாகக் கேட்டனர். இந்த தூதுச் செய்தியின் எழுச்சிமிக்க குரல் இன்று லாஸ் ஏஞ்சலஸ் –ல் கேட்டது போன்றே முழு உலகிலும் கேட்கும்.

**பிறகு அமெரிக்கன் காங்கிரஸின் உறுப்பினர் Dana Rowrub Beaker அவர்கள் கூறினார்கள்:**

நீங்கள் வழங்கிய இந்த தூதுச்செய்தியை எங்கள் மூளை ஏற்றுக் கொண்டது. இது எனக்கு உங்களுடனான முதல் சந்திப்பாகும். தற்கால நிலைமைகள் மற்றும் ஏனைய விசயங்கள் தொடர்பான உங்களது அறிவு மற்றும் அறிவுப்பூர்வமான அணுகுமுறை ஆகியவற்றைப் பார்த்து மிகுந்த தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன். தற்கால நிலைமைகள் தொடர்பான உங்களது ஆய்வு உண்மைக்கு மிகவும் அருகில் இருக்கின்றது. உங்களது தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய விளக்கங்கள் என்னிடம் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த தூதுச்செய்தி பிறரை ஈர்க்கும் தன்மை நிறைந்ததாகவும், கேட்பதற்குத் தகுதியுடையதாகவும் இருக்கின்றது. எல்லா மதத்தவர்களும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இது இருக்கின்றது.

இவ்வாறே கலிஃபோர்னியா பல்கலைக்கழத்தின் Deen துறையைச் சார்ந்த Rashul Mauran என்ற பெண்மணி கூறுகின்றார்கள்:

இந்நிகழ்ச்சியில் நான் கலந்து கொண்டது எனது கண்ணியத்திற்குக் காரணமாக இருக்கின்றது. இந்நிகழச்சியின் நோக்கம் அமைதியையும் நல்லிணக்கத்தையும் வளர்ச்சியடையச் செய்வதாகும்.

பிறகு கூறிகின்றார்கள்: அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமிடமிருந்து எங்களுக்குக் கிடைத்த தூதுச் செய்தியானது ஆன்மீகம் மற்றும் Idealism ஆகியவற்றின் அழகான ஒன்றுசேர்தலாகும். சண்டைகளாலும், குழப்பங்களாலும் நிரம்பியுள்ள துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் உலகை அமைதி மற்றும் சாந்தி ஆகியவற்றால் நிரப்புவதற்கு நமக்கு மிக முக்கியமான பாடத்தைத் தரக்கூடியதாக அது இருக்கின்றது. நம்மில் ஒவ்வொருவருக்கும் இருக்கும் கடமை என்னவென்றால், நாம் எல்லாரும் சேர்ந்து சகோதரத்துவத்தை வளர்ச்சியடையச் செய்ய வேண்டும் என்ற முக்கிய பாடம் நமக்கு கிடைத்துள்ளது. இவ்வளவு முக்கியமான தூதுச் செய்தியை தரக்ககூடிய ஒரு நிகழ்ச்சியில் நாம் இருப்பதைவிட மிகப்பெரிய விசயம் இன்று வேறென்ன இருக்க முடியும்? இதன் மூலமாக நமது பிரச்சனைகள், சண்டைகள், குழப்பங்கள் ஆகியவை முடிவுக்கு வந்துவிடும். உலகம் அமைதியின் கூடாரமாக ஆகிவிடும்.

எகிப்தின் Counsalte Muhamed Sumair Sb அவர்களும் அங்கு வந்திருந்தார்கள். அவர்கள் கூறினார்கள்:

நான் பல சொற்பொழிவுகளையும், உரைகளையும் கேட்டுள்ளேன். உலகளாவிய சமாதானம் தொடர்பாக இத்தகைய ஒரு உரையை எனது வாழ்நாளில் நான் கேட்டதில்லை. இந்த உரை நேரடியாக எனது

உள்ளத்தில் இறங்கி விட்டது. இந்த உரையால் நான் மிகுதியான தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன். கலந்து கொண்ட அனைவரது கருத்தும் இவ்வாறே இருக்கும் என நான் உறுதி கொள்கின்றேன். இந்த தூதுச்செய்தி இலட்சக்கணக்கான எண்ணிக்கையில் உலக மக்கள் வரை சென்றடைய வேண்டும். இத்தூதுச் செய்தியை நானே மற்றவர்களுக்கு எட்ட வைப்பேன்.

**பிறகு ஒரு பேராசிரியை இவ்வாறு கூறுகின்றார்:**

உலக அமைதியை ஏற்படுத்துவது, மனிதகுலத்தின் மீது அன்பு செலுத்துவது ஆகிய விசயங்கள் என்னை மிகுதியான தாக்கத்திற்கு ஆளாக்கி விட்டன. அஹ்மதிய்யா ஜமாஅத் மனிதத்தன்மைக்காக எத்தகைய தீபத்தை ஏற்றியுள்ளது என்றால், அது இன்று முழு உலகிற்கும் தேவைப்படுகின்றது.

பிறகு அமெரிக்காவிலுள்ள புகழ்பெற்ற முஸ்லிம் அமைப்பான Muslim Public Affairs Council –ன் டைரக்டர் ஒரு பெண்மணி ஆவார். அவர் கூறுகின்றார்:

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டதன் மூலம் ஒரு முஸ்லிம் என்ற நிலையில் என்னுள் ஒரு வெப்பம் ஏற்பட்டுள்ளது. உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள். சனிக்கிழமை அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மிகவும் உணர்வுடனும், உத்வேகத்துடனும் புத்தம்புது தெம்புடனும் இந்த சபையை விட்டும் நான் எழுந்து சென்றேன்.

**அந்தப் பெண்மணி கூறுகின்றார்கள்:**

சொற்பொழிவு சொற்செறிவுடையதாகவும் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாகவும் இருந்தது. காலத்தின் தேவையாக அது இருந்தது. இறைவனுக்கும் அவனது தூதருக்கும் எதிராக செய்யப்படுகின்ற எல்லா ஆட்சேபனைகளுக்கும் மிகச் சிறந்த முறையில் அவர் பதில் கூறினார். பல சொற்பொழிவாளர்களும் இந்த விசயத்தைப் பேசுவதைத் தவிர்த்தவாறு நழுவிச் சென்று விடுகின்றனர். அறிவுப்பூர்வமான எந்த பதிலையும் அவர்கள் கூறுவதில்லை. அவர்கள் மிகவும் சிறந்த முறையில் அந்த எல்லா ஆட்சேபனைகளுக்கும் ஆதாரப்பூர்வமான பதில்களைத் தந்தார்கள். அதுவும் பெரும் எண்ணிக்கையில் மிகவும் உயர்வான தகுதி படைத்த மக்கள் அமர்ந்துள்ள ஒரு நிகழ்ச்சியில் அவர்கள் இந்த பதில்களைக் கூறியுள்ளார்கள்.

**பிறகு ஒரு விருந்தினர் இவ்வாறு கூறுகின்றார்:**

அமைதியை நிலைநாட்டுவது பற்றி இத்தகைய ஒரு உரையை எனது வாழ்நாளில் நான் கேட்டதேயில்லை. அந்த உரை நேரடியாக எங்களது உள்ளத்தைச் சென்றடைந்தது.

**பிறகு Bernadino Council உடைய Sherif அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

இந்த சொற்பொழிவு காலத்தின் தேவையாக இருக்கின்றது. இதற்கேற்ப நடப்பதன் மூலம் நாம் உலகில் அமைதியை நிலைநாட்ட முடியும்.

**ஒரு பெரிய கம்பெனியின் டைரக்டர் ஆக இருக்கும் ஒரு வழக்கறிஞர் இவ்வாறு கூறுகின்றார்:**

இது மிக நல்ல நிகழ்ச்சியாகும். போர்கள் பற்றிய இஸ்லாமிய போதனைகள் என்னை மிகுதியான தாக்கத்திற்கு ஆளாக்கியது. முஸ்லிம் அல்லாதவர்களுக்கு மிகவும் கஷ்டமான சமயங்களில் சிறந்த முறையில் அஹ்மதிகளால் தான் உதவி செய்ய முடியும்.

**பிறகு அங்குள்ள ஒரு சிறந்த டாக்டர் இவ்வாறு கூறுகின்றார்:**

எனக்கு ஜமாஅத்தைப் பற்றி அதிகமாக எதுவும் தெரியாது. ஆனால் இந்த சொற்பொழிவின் ஒவ்வொரு சொல்லையும் நான் கவனமாகச் சிந்தித்துப் பார்த்தேன். அதை உண்மையாகக் கண்டேன். உலகம் மூன்றாவது உலகப் போருக்காக தயாராகிக் கொண்டிருக்கின்றது என்ற சொற்கள் முற்றிலும் சரியானதாகும். உலகிலுள்ள எல்லா தலைவர்களுக்கும் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட வேண்டும்.

**பிறகு கிறிஸ்தவ பாதிரியான ஜேன் சேஸ் என்பவர் கூறுகின்றார்:**

இந்த உரை பாராட்டுதலுக்கு உரியதாகும். நீங்கள் தீவிரவாதத்தை கண்டிக்கிறீர்கள். எல்லாரது முன்னிலையிலும் எல்லாருக்கும் தெரியும் விதத்தில் இஸ்லாத்தின் சரியான போதனைகளை நீங்கள் எடுத்துக் கூறினீர்கள்.

**பிறகு விருந்தினரான நண்பர் டாக்டர் ஃபிரட் அவர்கள் கூறுகின்றார்கள்:**

மதங்கள் தொடர்பாக நீங்கள் கூறியவற்றை குறித்து எனது அறிவு மிகவும் குறைவானது. மதங்கள் தொடர்பாக நீங்கள் கூறிய சொற்கள் எனது எண்ணங்களைப் பிரதிபலிக்கக்கூடியதாக இருக்கின்றது. எல்லாரிடத்தும் அன்பு, எவரிடமும் பகையில்லை என்ற தூதுச் செய்தி மிகவும் வலுவான தூதுச் செய்தியாகும். ஒரே இறைவன் மட்டுமே இருக்கின்றான். யார் அவருடைய இறைவனோ அவனே என்னுடைய இறைவனும் ஆவான் என்று கூறி ஒருவர் மற்றவரை ஏற்றுக் கொள்கின்ற இந்த தூதுச் செய்தி அமைதிக்கு உத்திரவாதம் வழங்கக்கூடியதாக இருக்கின்றது.

பிறகு கூறுகின்றார்கள்: அமைதியை நிலைநாட்டுவதற்கான முயற்சிகள் மற்றும் அணு ஆயுதப்போர் தொடர்பான எச்சரிக்கை ஆகியவற்றை உலகிலுள்ள ஆட்சியாளர்கள் செவிமடுக்க வேண்டும்.

**பிறகு இன்னொரு நகரத்தின் மேயர் இவ்வாறு கூறுகின்றார்:**

அஹ்மதிய்யா ஜமாஅத் பற்றி எனக்கு மிகவும் குறைந்த அனுபவம்தான் இருந்தது. ஆலயத்தையும் அரசாங்கத்தையும் தனித்தனியாக வைக்க வேண்டும் என்ற உங்களது தூதுச் செய்தியை நான் மிகவும் பாராட்டுகின்றேன். நமக்கு இந்த நாட்டில் பல உரிமைகளும் கிடைக்கின்றது. ஆனால் உலகில் பல மக்களும் தங்களது கொள்கையின் காரணமாக அநீதிக்கு இலக்காகின்றனர் என்பதையும் நாம் நினைவில் வைக்க வேண்டும்.

பிறகு கூறுகின்றார்கள்: நான் எனது முழு வாழ்நாளையும் கல்வி கற்பதிலேயே கழித்துள்ளேன். இவ்வகையில் எனக்கு ஒரு புதிய அம்சம் தெரிய வந்திருக்கின்றது. அது எவ்வாறு இஸ்லாத்தின் உண்மையான போதனைகள் உலகில் அமைதி மற்றும் சகிப்புத்தன்மையை பரப்புவதில் உதவியாக இருக்க முடியும் என்ற விசயமாகும். பலவந்தமாக நடந்து கொள்வது மற்றும் அநீதி இழைத்தல் ஆகியவற்றை முடிவுக்கு கொண்டு வராத வரை உலகில் அமைதியை ஏற்படுத்த முடியாது என்ற உங்களது கருத்துக்கு உடன்பட்ட ஒருமித்த கருத்துடையவனாக நான் இருக்கின்றேன். நான் உங்களுக்கு நன்றி தெரிவிக்கின்றேன். இந்த உலகை சிறந்த இடமாக ஆக்குவதற்காக நான் எனது வாழ்க்கையை நீங்கள் கூறியுள்ள வழிமுறைகளுக்கேற்ப கழிப்பேன் என்று நான் நம்புகின்றேன்.

மற்றவர்கள் மீது இத்தகைய தாக்கம் ஏற்பட்டுள்ளது என்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உண்மைப் பேரன்பரின் அடிமையாகத் திகழ்கின்ற நம் மீது எவ்வளவு பெரிய பொறுப்பு இருக்கின்றது? இந்த முக்கியமான தூதுச் செய்தியை உலகிற்கு எட்ட வைப்பதுடன் அந்த போதனைகளுக்கேற்ப நாம் நம்மை வடிவமைத்துக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும்.

பிறகு Congress Men ஆக இருக்கின்ற Republican ஆன Dana Rura Beker அவர்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். இவர் கலிஃபோர்னியாவைச் சேர்ந்தவர் ஆவார். இவர் பொதுவாக இஸ்லாத்திற்கு எதிரான கருத்துக்களைக் கூறுபவர் ஆவார். ஒரு மாதத்திற்கு முன்பு போஸ்டனில் உள்ள விளையாட்டு மைதானத்தில் தாக்குதல் நடத்தப்பட்ட சமயத்தில், இவர்கள் இஸ்லாம் குழந்தைகளைக் கொல்வதற்கு ஆர்வத்தை ஊட்டுகின்றது. இன்றைய சமுதாயத்திற்கு இஸ்லாம் ஒரு ஆபத்தாகத் திகழ்கின்றது என்று கூறியிருந்தார்.

பிறகு பாகிஸ்தான் பற்றியும் அங்குள்ள அரசியல் பிரச்சனைகளுக்கு எப்படி தீர்வு காண வேண்டும் என்பது பற்றியும் அவர் கூறியிருந்தார். எனது இந்த சொற்பொழிவைக் கேட்ட பிறகு அவர் தந்துள்ள ரிமார்க் இதுவாகும்.

இன்றைய இந்த சொற்பொழிவைக் கேட்ட பிறகு இது நமது உள்ளங்களின் குரலாகும் என்று நான் கூறுகின்றேன். உங்களது அன்பு செலுத்துகின்ற மற்றும் ஒருவர் மற்றவரை சகித்துக் கொள்கின்ற, ஒருவர் மற்றவரை ஏற்றுக் கொள்கின்ற இந்த தூதுச் செய்தியானது மிகவும் முக்கியமானதாகும். இது நம்மில் ஒருவரை மற்றவருடன் இணைத்து வைக்கும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் இவர்களை முதல் முறையாக சந்திதேன். நான் தற்கால நிலைமைகள் தொடர்பான இவர்களது கவலை மற்றும் ஞானம் நிறைந்த சிந்தனை ஆகியவற்றால் நான் தாக்கத்திற்கு ஆளாகி இருக்கின்றேன். ஒவ்வொரு மதத்துடனும் தொடர்புடைய நபர்களும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கலீஃபாவின் இந்த தூதுச் செய்தியை ஏற்றுக் கொள்ள முடியும். அது அமைதியின் தூதுச் செய்தியாகும். செவிமடுக்கத் தகுதி உடையதாகும். மிகவும் நிம்மதியான சூழலில் இந்த அமைதியின் தூதுச் செய்தி நமக்கு கிடைத்திருக்கின்றது.

அமெரிக்காவின் வெளி விவகாரச் செயலர் அவர்களுக்கு இவர் கடிதம் எழுதியுள்ளார். அதனை பிறகு அவர்கள் எனக்கு அனுப்பி வைத்தார்கள். **அதில் எழுதுகின்றார்:**

மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது அவர்கள் தெற்கு கலிஃபோர்னியா சுற்றுப் பயணத்தின் போது, அவர் தமது நோக்கத்தை நிறைவு செய்தவாறு இங்குள்ள மக்களது உள்ளங்களில் நன்மை, அன்பு, மென்மை ஆகிய கதிர்களின் விதைகளை விதைத்துள்ளார். அவ்விதைகளின் கதிர்களை பல ஆண்டுகளாக அவர் அறுவடை செய்வார். அதன் அருள்களைப் பெற்றுக் கொண்டே இருப்பார்.

ஆக, இஸ்லாத்திற்கு எதிராக இருந்த இந்த நபர் இப்போது இவ்வாறு கூறியுள்ளார். அவர் கூறியுள்ள விசயங்களிலிருந்து கிடைக்கின்ற அருள்களை பல ஆண்டுகளாக அவர் அறுவடை செய்வார் என்று கூறியுள்ளார். இவ்வாறு இஸ்லாம் தொடர்பாக அது தீவிரவாதத்தை விரும்புகின்றது என்ற அவரது எண்ணத்தில் மாற்றம் ஏற்பட்டு விட்டது.

பிறகு கலிஃபோர்னியா மாநிலத்தின் முன்னாள் கவர்னர் அவர்கள் என்னுடன் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார். இவருக்கு நான் M.T.A. தொடர்பாக கூறினேன். இதில் ஜமாஅத்தின் நோக்கம் என்ன? அது எப்படி தப்லீக் செய்கிறது? M.T.A. எவ்வாறு நடக்கின்றது? என்பதைப் பற்றி எடுத்துக் கூறினேன். இவருக்கு இதில் மிகுந்த ஆர்வம் ஏற்பட்டது. பிறகு அவர் இதன் Frequency ஐக் கேட்டுப் பெற்றுக் கொண்டார். நான் இதை பார்ப்பேன். அதில் கூறப்படும் விசயங்களைக் கேட்பேன் என்று கூறியுள்ளார்.

லாஸ் ஏஞ்சலஸில் இரண்டு பெரிய பத்திரிகைகளான Los Angeles Times மற்றும் Wall Street தரப்பிலிருந்தும் என்னுடன் நேர்காணல் இருந்தது. அங்கும் இஸ்லாம் தொடர்பாகவே அதிகமான விசயங்கள் பேசப்பட்டன. முதலில் அவர்கள் என்னிடம் கேட்ட கேள்வி இதுவாகும். சில முஸ்லிம்களின் கடுமையான செயல்கள் மற்றும் தீவிரவாத செயல்கள் காரணமாக இஸ்லாம் பற்றிய மிகத் தீய தாக்கம் மக்களிடம் ஏற்பட்டிருக்கும்போது உங்களால் இஸ்லாத்தின் அமைதி நிறைந்த போதனைகளை எப்படி பரப்ப முடியும்? நீங்கள் இத்தகைய தாக்கத்தைப் போக்குவதற்கு என்ன செய்கின்றீர்கள்? என்று அவர்கள் கேட்டார்கள். அதற்கு நான் உண்மையான இஸ்லாம் அமைதியின் தூதுச் செய்தி ஆகும். இஸ்லாம் என்பதன் பொருளே அமைதி மற்றும் சாந்தி என்பதாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முன்னறிவிப்பிற்கேற்ப இறுதிக் காலத்தில் வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியும் வரவேண்டியதுள்ளது என்பது எங்களது கொள்கையாகும். இவ்வாறு எவரை நாங்கள் ஏற்றுக் கொண்டுள்ளோமோ அவர் வந்து விட்டார். முஸ்லிம்களுக்கு மட்டுமல்லாமல் முழு உலகையும் இஸ்லாத்தின் உண்மையான சரியான போதனைகளால் ஒளியூட்ட வேண்டியதிருக்கிறது. இஸ்லாத்தின் அமைதி மற்றும் நல்லிணக்கம் தொடர்பான போதனைகள் பற்றி உலகிற்கு தெரிவிக்க வேண்டும். எனவே இந்தக் காலத்தில் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் வந்தார்கள். அவர்கள் அந்த முன்னறிவிப்பிக்கேற்ப உண்மையான போதனைகளை உலகிற்கு எடுத்துக் கூறினார்கள். அதனை நாங்கள் இப்போது மற்றவர்களுக்கும் கூறிக் கொண்டிருக்கின்றோம் என்று நான் பதில் கூறினேன். பிறகு நான் அவர்களிடம் இஸ்லாத்தில் போர்கள் ஏன் நடந்தன? என்றும் கேட்கப்படுகின்றது. முதலில் நடந்த நேர்காணலில் இதைப் பற்றி கூறியிருந்தேன்.

முஸ்லிம்கள் முதலில் தாக்குதல் நடத்தவில்லை. முஸ்லிம்கள் மீது கொடுமைகள் இழைக்கப்பட்டன. அப்போது தான் தாக்குதல் நடத்தப்பட்டது. பதில் நடவடிக்கையாக அந்த தாக்குதல் நடத்தப்பட்டது.

இப்போது முஸ்லிம்களுக்கு எதிராக எந்த மார்க்கப் போரும் நடக்கவில்லை. எனவே இத்தகைய சந்தர்ப்பம் உருவாகாத வரை வாளால் ஆன எல்லா போர்களும் முஸ்லிம்களுக்கு தடை செய்யப்பட்டிருக்கின்றது. எந்தவொரு முஸ்லிமும் அல்லது ஜிஹாது அமைப்புகளும் இவ்வாறு போர் புரிய வேண்டும் என்ற எண்ணத்தில் செயல்படுகின்றனரோ அவர்கள் தவறிழைக்கின்றனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ அல்லது நேர்வழியிலிருந்த கலீஃபாக்களோ இத்தகைய குற்றத்தை செய்ததாக எப்போதும் நிரூபிக்கப்படவில்லை என்று நான் பதில் கூறினேன்.

பிறகு அரபு மக்கள் பற்றி அவர்கள் கேள்வி கேட்டார்கள். அரபு நாடுகளின் நிலைமைகள் எவ்வாறு இருக்கின்றது? இதைப் பற்றி நான் அவர்களிடம் முதலில் அகற்றப்பட்டுள்ள அரபு நாட்டு அரசாங்கங்கள் அல்லது எவற்றை இப்போது அகற்றுவதற்காக முயற்சிகள் நடைபெற்று வருகின்றதோ இத்தகைய அரசாங்கங்களுக்கு மேற்கத்திய சக்திகள் ஆதரவு அளித்து வந்தன. இப்போது அரபு நாட்டில் செயல்பட்டு வரும் இயக்கங்களில் அரசுக்கு எதிராக இருப்பவர்களுக்கும் கிளர்ச்சியில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கும் இதே மேற்கத்திய சக்திகள் ஆதரவு அளித்து வருகின்றது. இதற்குப் பின்னால் என்ன திட்டம் இருக்கின்றது? அவர்களது எண்ணம் எவ்வாறு இருக்கின்றது? என்பதை அவர்களே நன்கறிவர். இதைப் பற்றி நான் முதலிலேயே கூறிவிட்டேன்.

ஆனால் வெளிப்படையாகப் பார்க்கும் போது எனது பார்வையில் மேற்கத்திய சக்திகள் இஸ்லாம் மற்றும் அரபு நாட்டு மக்களை தங்களது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர விரும்புகிறது என்றே தோன்றுகிறது. நான் எகிப்தை உதாரணமாக எடுத்துக் கூறினேன். அங்கு முதலில் என்ன நடந்தது? இப்போது என்ன நடக்கிறது? என்பதைப் பற்றி கூறினேன். லிபியாவில் என்ன நடக்கிறது? என்பதைப் பற்றியும் கூறினேன்.

பொதுவாக நான் கூறியதை அப்படியே பத்திரிகையாளர்கள் வெளியிடுவதில்லை. ஆனால் இவர்கள் ஓரளவு நான் கூறியதை அப்படியே எழுதியிருக்கின்றார்கள். நான் அவர்களிடம் இதையும் கூறினேன். மேற்கத்திய சக்திகள் ஜனநாயகத்தை நிலைநாட்ட விரும்பினால், பிறகு நீதியுடன் எதை ஜனநாயகம் என்று நாம் கூறுகின்றோமோ அதை நிலைநாட்ட முயற்சி செய்ய வேண்டும். பிறகு சிரியா தொடர்பாகவும் அவர்கள் கேட்டனர். அங்கு நடைபெறுகின்ற சண்டைகள் பற்றி கேட்டனர். அவர்களிடம் நான் முதலில் “இது சுன்னிகளுக்கும் ஷியாக்களுக்கும் இடையிலுள்ள பிரச்சனையாக இருந்தது. இதில் இன்னும் கிளர்ச்சியில் ஈடுபடும் இயக்கங்கள் இணைந்து கொண்டன. அவர்களுக்கு இடையே முரண்பட்ட கருத்துக்கள் இருந்தன. இப்போது அது உள்நாட்டுப் போராக மட்டும் இல்லை. இது இப்போது மேற்கத்திய நாடகள் தங்கள் சுய இலாபத்தைப் பெறுவதற்கான ஒரு பிரச்சனையாகவும் ஆகிவிட்டது. எனவே இரு பிரிவினரும் நேர்மையற்ற முறையில் செயல்படுகின்றனர். அவ்விரு பிரிவினருக்கும் மேற்கத்திய நாடுகள் ஆதரவு அளித்து வருகின்றன” என்று கூறினேன்.

அவர்களுக்கு நான் கூறினேன்: உலகம் ஒரு Global Village ஆகத் திகழ்கின்றது. ஒவ்வொருவரும் மற்றவரது நிலைமைகள் காரணமாக தாக்கத்திற்கு ஆளாகின்றார். ரஷ்யா சிரியாவிலுள்ள அரசாங்கத்திற்கு உதவி செய்கின்றது. மேற்கத்திய சக்திகள் கிளர்ச்சியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு உதவி செய்கின்றது. எவ்வாறிருப்பினும், இரு பிரிவினருக்கும் போர் நிறுத்தப்படுவதில் தான் பலன் இருக்கின்றது. இருவரும் இதற்காக முயற்சிகளைச் செய்து வருகின்றனர். எவ்வாறிருப்பினும், நான் கூறிய இந்த விசயத்தையும் அவர்கள் தமது செய்தியில் குறிப்பிட்டிருந்தனர்.

பிறகு அவர் என்னிடம் உங்களது இந்த தூதுச் செய்தி அமைதியின் தூதுச் செய்தி என்றால் அது ஏன் பரவவில்லை? என்று கேட்டார். நான் அவரிடம் இந்த தூதுச் செய்தி பரவுகின்றது. மெல்ல மெல்ல உலகம் இதனை ஏற்றுக் கொள்கிறது. இப்போதுள்ள தலைமுறை மார்க்கத்தை ஏற்றுக் கொள்ளவில்லையென்றால் எதிர்கால தலைமுறை அதை ஏற்றுக் கொள்ளும். நாங்கள் தைரியத்துடன் இந்த தூதுச் செய்தியை எட்ட வைத்துக் கொண்டே செல்கின்றோம். நாங்கள் தைரியத்தை இழக்க மாட்டோம். உங்களது உள்ளங்களை நாங்கள் வெல்ல முடியாமல் போனாலும் உங்களது சந்ததிகளின் உள்ளங்களை கண்டிப்பாக நாங்கள் வெல்வோம். இன்சா அல்லாஹுத்தஆலா என்று நான் அவர்களிடம் கூறினேன். பிறகு மதங்கள் தொடர்பாகவும் பேசப்பட்டன.

ஒவ்வொரு மதமும் இறைவன் புறமிருந்து தோன்றியதாகும். இறைவன் புறமிருந்து நபிமார்கள் வந்தனர். உண்மையான போதனைகளை அவர்கள் கொண்டு வந்தனர். எல்லா நபிமார்கள் மீதும் நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். ஆனால் காலம் செல்லச் செல்ல அவர்களது போதனைகள் மாறி விட்டன. இதே நிலை தான் முஸ்லிம்களுக்கும் ஏற்பட்டது. திருக்குர்ஆன் அதன் அசல் வடிவில் இருந்தும் திருக்குர்ஆனுக்கு ஏற்ப செயல்படுவதை முஸ்லிம்கள் கைவிட்டு விட்டனர். அதை அவர்கள் மறந்து விட்டனர். இதனால்தான் இந்தக் காலத்தில் அல்லாஹுத்தஆலா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அல்லாஹ் அனுப்பியுள்ளான் என்று நான் பதில் கூறினேன்.

பிறகு தீவிரவாத சம்பவங்கள் தொடர்பாக அவர்கள் கேட்டனர். இதன் காரணமாக மக்கள் அதிலும் குறிப்பாக அமெரிக்காவிலுள்ள பொதுமக்கள் இஸ்லாத்தை வெறுக்கின்றனர். இஸ்லாத்திற்கு எதிராக அவர்களிடம் மிகுதியான வெறுப்பு இருக்கின்றது. எவ்வாறிருப்பினும் நான் அவர்களிடம் கூறினேன். நாங்கள் எங்களது பணிகளைச் செய்து கொண்டிருக்கின்றோம். தப்பெண்ணங்களை அகற்றுவதற்கு கால அவகாசம் தேவை. நான் ஏற்கனவே கூறியதைப் போன்றே இந்த தலைமுறை வரை இந்த தூதுச் செய்தி எட்டவில்லை என்றாலும் அடுத்த தலைமுறை வரை கண்டிப்பாக இஸ்லாத்தின் அழகிய வடிவம் அவர்களுக்கு எட்டி விடும். அதனை அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள்.

நான் இதையும் அவர்களிடம் கூறினேன். பொதுவாக மக்கள் மதத்தை விட்டே விலகிச் செல்கின்றார்கள். மதத்துடன் அவர்களுக்கு தொடர்பில்லை. அது கிறிஸ்தவமாக இருந்தாலும் சரி அல்லது வேறு மதமாக இருந்தாலும் சரி. இன்னும் சொல்வதென்றால், அவர்களுக்கு இறைவன் மீதும் நம்பிக்கை இல்லை. அவர்கள் நாத்திகர்களாக ஆகிக் கொண்டிருக்கின்றனர். ஒரு காலம் வரும். அப்போது அவர்கள் மீண்டும் எதிர்நடவடிக்கை என்ற வகையில் இறைவன் மீது நம்பிக்கை கொள்வர். பிறகு அவர்கள் மதத்தின் பக்கம் திரும்பி விடுவர். அவர்கள் மதத்தின் பக்கம் திரும்பி வரும் போது அந்த சமயத்தில் அஹ்மதி முஸ்லிம்களாகிய நாங்கள் தான் இந்த வெற்றிடத்தை நிரப்புபவர்களாக இருப்போம். அப்போது இவர்களுக்கு முன்னால் உண்மையான போதனைகள் வரும் என்று நான் கூறினேன்.

நான் கூறிய இந்த எல்லாவற்றையும் அவர் பதிவு செய்து கொண்டார். குறிப்பெடுத்துக் கொண்டார். பிறகு சிறந்த முறையில் இதனை எழுதவும் செய்தார்.

இவ்வாறே Wall Street Journal என்ற பத்திரிகையும் உலகில் புகழ்பெற்ற பத்திரிகையாகும். உயர் மட்டத்திலுள்ள மக்கள் இதனை அதிகமாக படிக்கின்றனர். இதிலுள்ள விசயங்களைக் கேட்கின்றனர். பெருமளவில் இதன் Circulation இருந்து வருகிறது. அமெரிக்காவிற்கு வெளியில் கூட மிகவும் விரிவான பகுதிகளில் கூட இந்த பத்திரிகை சென்றடைகிறது. குறிப்பாக சீனா வரை இந்த பத்திரிகை சென்றடைகிறது. இங்கும் அவர்கள் இதை போன்ற கேள்விகளையே கேட்டனர். அவர்கள் என்னிடம் நீங்கள் கலிஃபோர்னியாவிற்கு ஏன் வந்தீர்கள்? என்று கேட்டார்கள். நான் அவர்களிடம் முழு உலகமும் எங்களுடையதாகும். நாங்கள் ஒவ்வொரு இடத்திற்கும் செல்வோம். இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைப்போம். இன்சா அல்லாஹுத்தஆலா என்று கூறினேன். இதைத் தவிர எங்களது ஜமாஅத் இங்கு இருக்கின்றது. ஜமாஅத்தில் உள்ளவர்களைச் சந்திக்கவும் நான் வந்துள்ளேன் என்றும் கூறினேன். பிறகு இந்த மக்களின் மூளைகளில் அரசியல் தலைவர்களைப் போன்று அல்லது எவ்வாறு அமெரிக்காவுக்கு மக்கள் பிச்சை கேட்பதற்காக செல்கின்றார்களோ அவர்களைப் போன்று அல்லது எதையாவது பெறுவதற்கோ உதவி கோருவதற்கோ மக்கள் செல்வது போன்று நானும் சென்றுள்ளேன் என்ற எண்ணம் இருந்தது. எனவே தான் அமெரிக்காவின் அரசியல் தலைவர்களைச் சந்திக்கும் போது நீங்கள் அவர்களிடம் என்ன கேட்க விரும்புகின்றீர்கள்? உங்களுடைய அஜெண்டா என்ன? என்று அவர்கள் கேட்டனர். அதற்கு நான் எனக்காக நான் எதையும் கேட்டுப் பெற இங்கு வரவில்லை. அவ்வாறே எனது ஜமாஅத்திற்காக எதையும் கேட்பதற்காகவும் நான் இங்கு வரவில்லை. நான் உலகில் அமைதி நிலைநாட்டப்பட வேண்டும் என்பதையே விரும்புகின்றேன். உலகளாவிய அமைதியை நிலைநாட்டுவதற்கு உதவுகின்ற நிகழ்ச்சிகளை நடத்துவதற்கும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவே வந்துள்ளேன். அதன் மூலம் உலகை மூன்றாம் உலகப் போரிலிருந்தும் காப்பாற்றலாம். இந்த நிலைமைகள் கட்டுப்பாட்டிற்குள் வரவில்லையென்றால் மூன்றாம் உலகப் போர் நமது எல்லையில் நின்று கொண்டிருக்கின்றது என்று நான் கூறினேன்.

பிறகு இன்றைய நாட்களில் நடந்து வருகின்ற வெடிகுண்டு தாக்குதல் தொடர்பாகவும் அவர்கள் கேட்டனர். அதற்கு நான் அப்பாவி மக்கள் கொல்லப்படுகின்றனர். இதன் காரணமாக எதிர்ப்பும் அதிகமாகிக் கொண்டே செல்கிறது. இந்த நாட்களில் எங்கெல்லாம் மேற்கத்திய நாடுகளுக்கு எதிராக தாக்குதல்கள் நடக்கின்றதோ அங்கு அப்பாவிகளை கொல்ல வேண்டும் என்பது இஸ்லாத்தின் போதனை அல்ல. ஆனால் நீங்கள் இந்த தாக்குதல்கள் காரணமாக அப்பாவிகளைக் கொலை செய்கின்றீர்கள். இதன் காரணமாகவே எதிர்ப்பு அதிகமாகிக் கொண்டே செல்கிறது.

அமெரிக்காவில் Wall Street Journal Los Angeles Times, Chicago Times போன்ற பத்திரிகைகள் மூலமாக மீடியாவில் பெருமளவில் கவரேஜ் ஏற்பட்டுள்ளது. ஒரு கணிப்பிற்கேற்ப பிரிண்ட் மீடியா மூலமா ஐந்தரை மில்லியன் மக்கள் வரை தூதுச் செய்தி எட்டியுள்ளது. மேலும் ஆன்லைன் மீடியா மூலமாக ஐந்து மில்லியன் மக்கள் வரை தூதுச் செய்தி எட்டியுள்ளது என்பது மிகவும் எச்சரிக்கையுடன் நாம் மேற்கொண்டுள்ள கணிப்பாகும். மேலும் ஒன்றரை மில்லியன் மக்கள் வரை ரேடியோ மற்றும் டி.வி.யின் மூலமாக தூதச் செயதி எட்டியுள்ளது. இவையெல்லாம் நமது முயற்சிகளால் ஒருபோதும் நடக்க முடியாது. இது அல்லாஹ் வீசச் செய்துள்ள காற்றாகும். இது அல்லாஹ்வின் ஆதரவு மற்றும் உதவியின் வெளிப்பாடாகும். இது அல்லாஹ் வல்லமையுள்ளவன் என்பதைக் காட்டுகின்ற ஒரு சிறு காட்சியாகும். உங்களது எண்ணம் நல்லதாக இருக்க வேண்டும். பிறகு இதற்காக நீங்கள் முயற்சி செய்தால் அதற்கான வழிவகைகளை நான் செய்வேன் என்று அல்லாஹ் கூறுகின்றான். இப்போது இந்த ஜமாஅத்துகளின் பணி இதிலிருந்து பலன் பெற்றவாறு இஸ்லாத்தின் அழகிய போதனைகளை மேலும் முன்னேறும்படி செய்வதாகும். இதற்குப் பிறகு வாங்க்கூவர் –ல் உள்ள மஸ்ஜிது பைத்துர் ரஹ்மானின் தொடக்க நிகழ்ச்சி இருந்தது. அங்கு பள்ளிவாசலின் தொடக்க நிகழ்ச்சியல் முஸ்லிம்கள் அல்லாத மற்றவர்களையும் நாம் அழைத்திருந்தோம். இதனையும் மீடியா பெருமளவில் கவரேஜ் செய்திருந்தது. ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது அமெரிக்காவில் 12 மில்லியன் மக்கள் வரை தூதுச் செய்தி எட்டியுள்ளது. இதனை நமது முயற்சியால் செய்வது என்பது சாத்தியமற்ற ஒன்றாகும்.

கனடா வில் பள்ளிவாசல் துவக்க நிகழ்ச்சி மூலமாகவும், என்னுடன் நடைபெற்ற பல்வேறு நேர்காணல்கள் மூலமாகவும் ஏறக்குறைய 8½ மில்லியன் மக்கள் வரை தூதுச் செய்தி எட்டியுள்ளது. இங்கு B.B.C. இருப்பது போன்று அங்கு C.B.C. அவர்களது தேசிய சேனல் ஆகும். பள்ளிவாசல் தொடர்பான செய்தியை அது ஒளிபரப்பியது. நமது கணிப்பின்படி ஏறக்குறைய 10 இலட்சம் மக்களுக்கு இந்த செய்தி எட்டியுள்ளது. பிறகு C டி.வி. இவர்களது செய்திச் சேனல் ஆகும். அதன் மூலம் 22 இலட்சம் மக்களுக்கு செய்தி எட்டியுள்ளது. பிறகு Global T.V. மூலம் 6 இலட்சம் மக்களுக்கு செய்தி எட்டியுள்ளது. பிறகு ரேடியோ கனடா மூலமாகவும் ஃபிரான்ஸ் மொழியில் C.B.C. மூலமாகவும் 4 இலட்சம் மக்களுக்கு செய்தி எட்டியுள்ளது. மொத்தத்தில் பள்ளிவாசல் நிகழ்ச்சி மூலம் 8½ இலட்சம் மக்களுக்கு இஸ்லாத்தின் தூதுச்செய்தி எட்டியது.

பல்வேறு ரேடியோ சேனல்கள் மூலமாகவும், பத்திரிகைகள் மூலமாகவும் தூதுச்செய்தி எட்டியிருக்கின்றது. 11 பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டுள்ளது. அதன் மூலம் ஏறக்குறைய 7½ இலட்சம் மக்களுக்கு தூதுச்செய்தி எட்டியது. ரேடியோ மூலமாக 11 இலட்சம் மக்களுக்கு தூதுச்செய்தி எட்டியது. Athemic Media –வின் ரேடியோ நிலையங்கள் உள்ளன. அதன் மூலமாக ஏறக்குறைய 6 இலட்சம் மக்களுக்கு இந்த தூதுச்செய்தி எட்டியுள்ளது. அங்கு நமது சீக்கிய நண்பர் ஒருவர் மன்மீத் புல்லர் சாஹிப் உள்ளார்கள். அவர் அரசியல்வாதியாவார். அல்பெர்ட்டா மாநிலத்தின் அமைச்சராக அவர் இருக்கின்றார். அவர் கூறினார். சில நாட்களுக்கு பிறகு நான் Geeneva –வில் ஒரு சொற்பொழிவாற்ற வேண்டியது இருக்கின்றது. அந்த உரையை நான் ஏற்கனவே தயார் செய்திருந்தேன். அவர்கள் பள்ளிவாசலின் தொடக்க நிகழ்ச்சிக்கு வந்திருந்தார்கள்.

அங்கு எனது உரையை அவர்கள் கேட்டபிறகு, நான் எனது உரையை மீண்டும் எழுதுவேன். அந்த சொற்பொழிவில் நீங்கள் கூறிய விசயங்களையும் சேர்த்துக் கொள்வேன். நீங்கள் கூறிய விசயங்களை முழுமையாக நான் ஏற்றுக் கொள்கின்றேன் என்று அவர்கள் கூறினார்கள்.

பிறகு அங்கு Shere Punjab என்ற ஒரு ரேடியோ இருக்கின்றது. அதன் உரிமையாளரான பல்விந்தர் சிங் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்:

உங்களது கருத்துக்களில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை. உங்களது இந்த சொற்பொழிவில் உங்களிடம் இருக்கும் மிகுதியான தைரியத்தை என்னால் பார்க்க முடிந்தது என்று கூறியுள்ளார்கள்.

**கிறிஸ்டன் பெக்கர் சாஹிபா அவர்கள் கூறினார்கள்:**

நீங்கள் கூறிய ஒரு விசயம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அது என்னவென்றால் நான் கூறிய சொற்களை அவர் குறிப்பிட்டிருக்கின்றார். அதாவது நாம் ஒரு பள்ளிவாசலை திறந்து வைக்கும் போது மார்க்க சுதந்திரத்தின் ஒரு புதிய அத்தியாயத்தை நாம் எழுதுகின்றோம் என்று நான் கூறியது அவருக்கு மிகவும் பிடித்திருக்கின்றது. உங்களது உரையின் மூலமாக அஹ்மதிகள் கடினமாக நடந்து கொள்வதை விரும்புபவர்கள் அல்ல. மாறாக, அமைதியை விரும்புபவர்கள் என்பதும் அஹ்மதிகள் மனித உரிமைகளை மதித்து நடப்பவர்கள் என்பதும் நிரூபிக்கப்பட்டு விட்டது என்று அவர் கூறியுள்ளார்.

பிறகு B.B.C. –யின் நிருபர் என்னைப் பற்றி, அவர் எனது எல்லா கேள்விகளுக்கும் திருப்திகரமான பதில்களைத் தந்துள்ளார். எந்த பொருளை நான் தேடிக் கொண்டிருந்தேனோ அது எனக்கு கிடைத்து விட்டது என்று கூறியுள்ளார். பிறகு மாலையில் தமது செய்திகளில் இதனை அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் ஒரு பத்திரிகையாளர் நான் இந்த முழு உரையையும் முழுவதுமாக எனது பத்திரிகையில் வெளியிடுவேன். மேலும் இதில் வியக்கத்தக்க தூதுச் செய்தி இருக்கின்றது என்று கூறியுள்ளார்.

**ஒரு தொழிலதிபர் கூறுகின்றார்:**

அமைதி என்பது கிறிஸ்தவத்தின் பங்கு மட்டும் அல்ல. மாறாக அமைதி என்பது எல்லா மதங்களின் பங்காக இருக்கின்றது என்பது இன்று தான் எனக்கு தெரிய வந்துள்ளது. இன்று நான் கற்றுக் கொண்ட விசயங்களை கண்டிப்பாக என்னுடைய பிள்ளைகளுக்கும் கற்றுக் கொடுப்பேன்.

**பிறகு மரோகாஸ் -ஐச் சேர்ந்த ஒரு முஸ்லிம் கூறுகின்றார்:**

நீங்கள் அமைதியின் தூதுச் செய்தியை முன்னேறும்படி செய்கின்றீர்கள். இதன் மூலமாக மீடியாவின் மூலம் தீவிரவாதத்திற்குப் பதிலாக அமைதியை விரும்பும் போதனைகள் பரவும். நானும் முஸ்லிம் ஆவேன். ஆனால் இன்று நான் இந்த சொற்பொழிவின் மூலமாக இஸ்லாம் தொடர்பான பல்வேறு புதிய விசயங்களைக் கற்றுக் கொண்டேன்.

**பள்ளிவாசலின் துவக்க நிகழ்ச்சியில் நான் நிகழ்த்திய துவக்க உரை பற்றி ஒரு விருந்தினர் இவ்வாறு கூறுகின்றார்:**

இந்த சொற்பொழிவு மிகுதியான சிந்தனைகளால் நிரம்பி இருக்கின்றது. இதில் விரிவாக பல அம்சங்களும் கூறப்பட்டிருக்கின்றது. குறிப்பாக விசயம் என்னவென்றால் ஒரு சாதாரண மனிதனுக்கு ஏற்படும். பயம் பற்றி உங்கள் சொற்பொழிவில் நீங்கள் கூறினீர்கள். சொற்பொழிவு மிகவும் விளக்கமாக நிகழ்த்தப்பட்டது. அதில் உங்களது போற்றத்தக்க அழகிய தொலைநோக்குப் பார்வையும் இருந்தது.

ஒருவர் கூறினார்: முழு உலகிற்கும் உங்களது ஏகத்துவத்தின் தூதுச் செய்தியானது தன்னகத்தே முக்கியமான கருத்தை உடையதாக இருக்கின்றது.

செய்தியை எட்ட வைப்பதில் பல்வேறு மீடியாக்கள் தங்களது பங்கை வகித்துள்ளன. C.B.C., Calgeri –ல் நடைபெற்ற நேர்காணலை ஒளிபரப்பியது. C. T.V. மற்றும் Omni T.V ஆகியவற்றின் மூலம் ஏறக்குறைய 8½ மில்லியன் அதாவது 85 இலட்சம் மக்களுக்கு இந்த தூதுச் செய்தி எட்டியுள்ளது.

ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் ஏறக்குறைய 2 கோடிக்கும் அதிகமான மக்களுக்கு இந்த தூதுச் செய்தி எட்டியிருக்கின்றது. அமெரிக்காவின் மக்கள்தொகையின் அடிப்படையில் 50% விட அதிகமான மக்களுக்கு தூதுச் செய்தி எட்டியுள்ளது. வெஸ்ட் கோஸ்டின் மக்கள் தொகையைப் பொருத்தவரையில் ஏறக்குறைய 25% லிருந்து 30% வரையுள்ள மக்களுக்கு தூதுச் செய்தி எட்டி விட்டது என்று நான் எண்ணுகின்றேன். கனடாவின் முழு

மக்கள்தொகையின் அடிப்படையில் 25% மக்களுக்கு தூதுச் செய்தி எட்டி விட்டது. எவ்வகையிலும் இந்த தூதுச் செய்தி எட்டுவது என்பது சாத்தியமற்ற ஒன்றாகும். அல்லாஹ்வின் அருளால் இது நடந்துள்ளது.

கனடாவில் என்னிடம் ஒரு கேள்வி கேட்கப்பட்டது. இஸ்லாம் அமைதியின் மார்க்கம் என்றால் இன்று முஸ்லிம்கள் தரப்பிலிருந்தும் அந்த அமைதி வெளிப்படுத்தப்படுகின்றதா? என்று கேட்டார்கள். அதற்கு நான் இதுவே திருக்குர்ஆனின் போதனையாகும். ஒரு தலைவரோ அல்லது பொதுமக்களில் ஒருவரோ இந்த போதனைகளை வெளிப்படுத்திக் காட்டாமல் இருந்தால் இது அவர்களது தவறாகும். பெண்களுக்கு அவர்களுக்கு உரிய உரிமைகள் செலுத்தப்படாமல் இருக்கின்றது. முஸ்லிம் நாடுகளில் இவ்வாறு நடக்கின்றது. எனவே தான் அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அனுப்பியுள்ளான்.

பிறகு மீண்டும் மீண்டும் ஏற்கனவே நடந்த சம்பவங்களைப் பற்றியே கேள்வி கேட்கப்பட்டது. கனடாவில் இரயில் வண்டியில் நடந்த சம்பவம், போஸ்டனில் நடந்த குண்டு வெடிப்பு சம்பவம், இலண்டனில் நடந்த சம்பவம் ஆகியவற்றைப் பற்றி கேட்கப்பட்டது. அதற்கு நான் இவையெல்லாம் அல்லாஹ்வை விட்டும் வெகு தொலைவில் விலகிச் சென்று விட்டதன் விளைவாகும் என்று அவரிடம் கூறினேன். இவ்வாறு செய்யுங்கள் என்பது திருக்குர்ஆனின் போதனை அல்ல. மாறாக அல்லாஹ்வை விட்டு விலகி தொலைவில் சென்று விட்டதன் விளைவாக இவை ஏற்பட்டுள்ளன. இவர்கள் சரியான போதனைகளுக்கேற்ப செயல்பட்டால் அமைதி நிலைநாட்டப்பட்டு விடும் என்று நான் கூறினேன். மேலும் நான் அவர்களிடம் இஸ்லாத்தின் பெயரில் சில தீவிரவாத அமைப்புகளும் தனது வேலையைச் செய்து கொண்டிருக்கின்றன. இங்கிலாந்தில் நடைபெற்ற சம்பவத்தை நான் அங்கு கூறினேன். இங்கிலாந்தில் முஸ்லிம் கவுன்ஸில் முஸ்லிம்களின் ஒரு மிகப்பெரிய அமைப்பாக இருந்து வருகிறது. அதுவும் இந்த சம்பவத்தை மிகவும் வலுவாகவும் வன்மையாகவும் கண்டித்திருக்கின்றது. இது இஸ்லாத்திற்கு மாற்றமான செயல் என்று கூறியிருக்கின்றது. இது அவர்கள் சொன்ன நல்ல விசயமாகும். முஸ்லிம் கவுன்சில் இதைப் பற்றிய சிறந்த வாக்குமூலத்தைக் கூறியுள்ளது என்று நான் அவர்களிடம் கூறினேன்.

இவ்வாறே உலகில் தீவிரவாதத்தை அகற்ற நீங்கள் என்ன செய்கின்றீர்கள்? என்று கேட்கப்பட்டது. தொடர்ந்து இதற்காக முயற்சி செய்து வருகின்றோம். மேலும் உலகில் அமைதியை நிலைநாட்டுவதற்காக பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பல்வேறு மக்களுக்கு தொண்டும் செய்து வருகின்றோம். சக்தியின் பலம் கொண்டு இந்த அநீதிகளை தடுத்து நிறுத்துவதற்கு எங்களிடம் எந்த சக்தியும் இல்லை. இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தியை நாங்கள் பரப்புகின்றோம். அதை பரப்பிக் கொண்டே செல்வோம் என்று நான் கூறினேன்.

பிறகு அவர் பள்ளிவாசலிலிருந்து தீவிரவாதம் பரவுகிறது என்பது பிரசித்தி பெற்ற ஒரு விசயமாகி விட்டது என்று கூறினார். அவரிடம் நான் மற்றவர்களைப் பற்றி நான் எதுவும் கூற முடியாது. எங்களது அதாவது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பள்ளிவாசலிலிருந்து எப்போதுமே அமைதி, அன்பு மற்றும் நேசத்தின் தூதுச் செய்தியே அனுப்பப்பட்டிருக்கின்றது. இதற்காக நாங்கள் முயற்சி செய்து கொண்டிருக்கின்றோம். இதனால் தான் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் குற்றவாளிகள் அறவே இருப்பதில்லை. ஒன்றிரண்டு நபர்கள் இவ்வாறு இருந்தாலும் கூட ஜமாஅத் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கின்றது. பிறகு உடனடியாக அப்படிப்பட்டவர்களை ஜமாஅத்தை விட்டும் வெளியேற்றி விடுகின்றது என்று நான் கூறினேன்.

பிறகு மீண்டும் மீண்டும் C.B.C. –ன் நிரூபரான அந்தப் பெண்மணி சுற்றி வளைத்து கேள்வி கேட்டு இஸ்லாத்தின் போதனை அமைதியின் போதனை அல்ல என்ற விசயத்தை ஏற்றுக் கொள்ளும் வகையில் தனது பிடியில் என்னை கொண்டு வர அவர் முயற்சி செய்தார். ஏறக்குறைய 20 நிமிடங்கள் வரை இந்த நேர்காணல் இருந்தது. இறுதியில் நான் அவரிடம் நீங்கள் ஒரே கேள்வியை பல்வேறு கோணங்களில் கேட்டாலும் எனது பதில் அதே பதிலாகத்தான் இருக்கும் என்று கூறினேன். இதை கேட்டு விட்டு அவர் சிரித்தார். பிறகு அவர் நமது மக்களிடம் இவர்கள் எனது நிலையைப் புரிந்து கொண்டார்கள். எப்படியாவது இஸ்லாத்திற்கு எதிராக அவரிடமிருந்து ஒரு விசயத்தைக் கேட்டு விட வேண்டும் என்றே நான் விரும்பினேன்.

எவ்வாறிருப்பினும், இஸ்லாத்தின் உண்மையான போதனைகள் தாமே வெளிப்படுகின்றன. செயற்கைத்தன்மை நம்மிடம் இருக்காது. பிறகு உங்களுடைய இந்த தூதுச் செய்தி எப்படி பரவும்? என்று அவர் கேட்டார். அவரிடம் நான் நாங்கள் தூதுச் செய்தியை எட்ட வைக்கின்றோம். எட்ட வைத்துக் கொண்டே செல்வோம்.

இன்சா அல்லாஹுத்தஆலா நாங்கள் தைரியத்தை இழக்கமாட்டோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வாதம் புரிந்த போது தனியாகத்தான் இருந்தார்கள். அவர்கள் மரணித்த சமயத்தில் ஏறக்குறைய 5 இலட்சம் பேர் அஹ்மதிகளாக இருந்தனர். இதற்குப் பிறகு கிலாஃபத்தின் தொடர் ஆரம்பமானது. இப்போது 125 வருடங்கள் கடந்து விட்டன. நாங்கள் கோடிக்கணக்கில் இருக்கின்றோம். முஸ்லிம்களும் எங்களுடன் வந்து இணைகின்றனர். கிறிஸ்தவர்களும் இணைகின்றனர். மற்ற மதங்களைச் சேர்ந்தவர்களும் இணைகின்றனர். இன்சா அல்லாஹுத்தஆலா வருங்கால தலைமுறையைச் சேர்ந்தவர்கள் எங்களை ஏற்றுக் கொள்வார்கள். அப்போதுதான் உண்மையான அமைதி உலகில் நிலைநாட்டப்படும். உண்மையான இஸ்லாம் உலகில் பரவும் என்று நான் அவரிடம் கூறினேன்.

நான் ஏற்கனவே கூறியது போன்று அல்லாஹ்வின் அருளால் இந்த சுற்றுப் பயணத்தின் மூலமாக மிகுந்த எச்சரிக்கையுடன் நாம் செய்துள்ள கணிப்பிற்கேற்ப 20 மில்லியனிற்கும் அதிகமான மக்கள் வரை தூதுச் செய்தி எட்டியுள்ளது. அதாவது இரண்டு கோடிக்கும் அதிகமான மக்கள் வரை இந்த தூதுச் செய்தி எட்டியது. இவ்வளவு அதிகமான எண்ணிக்கையில் தூதுச் செய்தியை எட்ட வைப்பதும் பிறகு இஸ்லாம் மற்றும் ஜமாஅத் ஆகியவற்றிற்கு சாதகமாக மக்களது குரல் எழும்பி இருப்பதும் நிச்சயாக மனித முயற்சியால் ஒருபோதும் நடந்திருக்க முடியாது. இதற்கான சில உதாரணங்களை நான் உங்களுக்கு எடுத்துக் கூறியுள்ளேன். இது அல்லாஹ் வீசச் செய்துள்ள காற்றாகும்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹின் ஒரு கனவு பற்றி நான் லாஸ் ஏஞ்சலஸில் நிகழ்த்திய குத்பா உரையின் போது குறிப்பிட்டுக் கூறியிருந்தேன். அந்தக் கனவில் கடல் அலைகள் போல் மக்களது பெருங்கூட்டம் இருப்பதை அவர்கள் கண்டதாக கூறியிருந்தேன். ஆனால் அவர்கள் அதில் மக்கள் கூட்டத்தைப் பார்க்கவில்லை. வெறும் மைதானத்தை மட்டும் தான் பார்த்தார்கள். இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்திற்கு சாதகமாக பூமியிலிருந்து சப்தம் வருவதையே அவர்கள் கண்டார்கள். இப்போது எழுந்துள்ள இந்த குரல்களும் நிச்சயமாக இக்கனவின் ஒரு அம்சமாகத் திகழ்கின்றது.

எனவே மக்களது இந்த கவனமும் பலரும் கூறியுள்ள கருத்துக்களும் இன்சா அல்லாஹுத்தஆலா இத்தகைய குரல்கள் இந்த பகுதியிலிருந்து எழுந்து கொண்டேயிருக்கும் என்பதை உறுதிப்படுத்துகின்றது. அவை இஸ்லாத்திற்கு சாதகமாக மிகவும் வலுவாக ஒலிக்கும். இது அல்லாஹ்வின் ஒரு குறிப்பான செயலாகும். அதாவது ஒரு மாதத்திற்கு முன்பு தான் நான் ஸ்பெயின் சென்றிருந்தேன். அங்கு மிகவும் விரிவான முறையில் ஜமாஅத் பற்றிய அறிமுகம் ஏற்பட்டது. இஸ்லாத்தின் கீழ் இருந்த அந்த நாடுகள் இப்போது கிறிஸ்தவத்தின் கீழ் வந்து விட்டன. இப்போது மீண்டும் அங்கு இஸ்லாம் பற்றிய அறிமுகம் ஏற்பட்டுள்ளது. ஒரு மாதத்திற்குப் பிறகு நான் அமெரிக்காவில் அதிகமாக எண்ணிக்கையில் ஸ்பேனிஷ் மக்கள் குடி அமர்ந்துள்ள நாட்டிற்கு நான் சென்றேன். இப்போது இந்த பணிகளை நல்ல முறையில் செய்வது நமது பணியாகும். இரு நாடுகளிலும் அதாவது கிழக்கிலுள்ள ஸ்பெயினிலும் மேற்கிலுள்ள ஸ்பெயினிலும் அல்லாஹுத்தஆலா அஹ்மதிய்யத் அதாவது உண்மை இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைத்துள்ளான். அதனை முழுமையாக முயற்சி செய்து நாம் நீடித்திருக்கும்படி செய்ய வேண்டும். இந்த மக்களை இஸ்லாத்தின் கொடியின் கீழ் கொண்டு வர வேண்டும். அமெரிக்காவிலும் நான் லாஸ் ஏஞ்சலஸில் எனது குத்பா பேருரையில் இதனை கூறியிருந்தேன். அதாவது அங்குள்ள ஸ்பேனிஷ் மக்கள் ஸ்பெயினிலுள்ள மக்களை விட நாங்கள் பத்து மடங்கு எண்ணிக்கையில் அதிகமாக உள்ளோம். எனவே எங்கள் பக்கம் நீங்கள் கவனம் செலுத்துங்கள் என்று கூறுகின்றனர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களும் ஆலோசனை கூட்டத்தில் ஒரு விசயத்தை கூறியிருந்தார்கள். அவர்கள் கூறுகின்றார்கள்:

எனது பார்வையில் மேற்கிலிருந்து சூரியன் உதயமாவதற்கு அமெரிக்காவுடன் அதிகமாக தொடர்பு இருக்கின்றது.

பிறகு அமெரிக்காவில் தப்லீக் செய்து ஒரு குறிப்பான கவனத்துடன் செயல்படுவது பற்றியும் அவர்கள் ஓரிடத்தில் குறிப்பிட்டுக் கூறியிருக்கின்றார்கள். குறிப்பாக அமெரிக்காவில் தப்லீக் செய்வதற்கான நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ய வேண்டும். அத்துடன் இதையும் நினைவில் கொள்ள வேண்டும். தப்லீக் செய்வதுடன் நீங்கள்

உங்களுக்கு தர்பிய்யத் வழங்குவதையும் புதிதாக வருபவர்களுக்கு தர்பிய்யத் வழங்கவதையும் மறந்து விடக் கூடாது. இந்த இரண்டு விசயங்களும் மிகவும் அவசியமானதாகும். அல்லாஹ்வின் அருட்கொடைகளை நமது நற்செயல்கள் மூலம் நாம் வெளிப்படுத்திக் காட்டும் போதுதான் இது நடக்கும். இவ்வாறே கனடாவிலும் நான்கில் ஒரு பகுதியிலுள்ள மக்களுக்கு அல்லாஹுத்தஆலா இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தை அறிமுகப்படுத்தி விட்டான். அங்கு தப்லீக் களத்தை விரிவுபடுத்தியவாறு இந்தப் பணியை நாம் ஏற்று செய்ய வேண்டும். இவை தப்லீக் மூலமாகவும், தர்பிய்யத் மூலமாகவும், நன்றி தெரிவிக்கும் உணர்வுகளை வெளிப்படுத்துவதன் மூலமாகவும், இபாதத்தில் உயர் தரத்தைப் பெறுவதன் மூலமாகவும் நமக்கு கிடைக்கும். அல்லாஹ் இந்த இரு ஜமாஅத்துகளுக்கும் அதாவது அமெரிக்காவிற்கும் கனடாவிற்கும் உலகிலுள்ள மற்ற நாடுகளுக்கும் இந்த பணிகளை சிறந்த முறையில் செய்து முடிப்பதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

இங்கு நான் இதையும் கூற விரும்புகின்றேன். இந்த புது அறிமுகமும் நமக்காக திறந்துள்ள வழிகள் ஆகியவற்றின் மூலம் இரண்டு நாடுகளிலும் அதிகமாக இளைஞர்களுக்கு பணிகளைச் செய்வதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் வழங்கியுள்ளான். வருங்கால தலைமுறையானது முன்பை விட அதிகமாக தமது பொறுப்புகளை நிறைவேற்ற முயற்சிகளைச் செய்ய வேண்டும். இரண்டு இடங்களிலும் வெளி விவகாரச் செயலர்கள் இளைஞர்களாக இருக்கின்றார்கள். இவர்களும் இவர்களது குழுவும் சிறந்த முறையில் பணியாற்றக் கூடியவர்களாக இருக்கின்றனர். இருவரும் தமது தொடர்புகள் மூலம் மிகவும் விரிவான முறையில் பணிகளைச் செய்துள்ளனர். இப்போது திறந்துள்ள வழிகள் மூலம் பயன்பெறுவது தப்லீக் மற்றும் தர்பிய்யத் துறையின் பணியாகும். அல்லாஹ் இவர்கள் அனைவருக்கும் நற்கூலியை வழங்குவானாக! பணியில் முன்பை விட அதிகமாக இளைஞர்களை முன்னேறும்படி செய்வானாக! ஏதாவது ஒரு பணியைச் செய்து விட்டு அதில் எவ்வகையிலும் பெருமை கொள்பவர்களாக அவர்கள் ஆகிவிடக் கூடாது. மாறாக அல்லாஹ்வுக்காக பணிவை மேற்கொள்ளும் நிலை அவர்களிடம் உருவாக வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியிருப்பது போல் பணிவும் தாழ்மைக் குணமும் மிகவும் அவசியமானதாகும். இதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் அனைவருக்கும் வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HAZRATH KHALIFATUL MASIH V**
at BAIT-UL-FUTUH MOSQUE, London.
on **31.05.2013**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD H.A.
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456